ஒன்றரை இலட்சமாகச் சில கட்டுப்பாடுகளுடன் அதிகப்படுத்தப் பட்டுள்ளது. அதற்குப்பிறகு ரூபாய் ஒன்றரை இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அரசால் ஆண்டு தோறும் வழங்கப்படும் இந்தப் பராமரிப்புத் தொகையால் ஈடுகட்ட முடியவில்லை என்று இந்நிறுவனத்தின் நிர்வாகிகள் முறையீடு செய்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் வழங்கப் படுகின்ற பராமரிப்புத் தொகையை இரண்டு இலட்சத்திலிருந்து நான்கு இலட்சமாக வழங்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

D. Pharmacy Course

*Q.No. 120 : Thiru M. AMBIGAPATHY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether seats in D. Pharmacy are reserved for the children of medical shop owners in the State who have an Association; and

(b) if so, the number of seats reserved in the State?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ;

(அ) ஆம். மருந்தாக்கியல் பட்டயப் படிப்பில் 20 இடங்கள் மருந்து விற்பனையாளர்களின் பிள்ளைகளுக்காக ஒதுக்கப்படுகின்றன.

திரு. மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்படுகின்ற இடங்கள் அவர்களுடைய பிள்ளை களுக்கு முறையாகக் கிடைக்கிறதா? அப்படி கிடைக்கவில்லை யென்றால் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்டவர் களுக்குத்தான் கிடைக்கின்றது என்று இருந்து வருகிறது. அப்படிக் கிடைக்கவில்லை என்று குறிப்பாக மாண்புமிகு உறுப்பின ரவர்கள் தெரியப்படுத்தினால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

நாகை அரசினர் தலைமை மருத்துவமனைக்கு ஜெனரேட்டர்

*குறுகிய கால வினா எண். 3 திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகை பொது மருத்துவமனையில் வெள்ளம், புயல் காலங்களில் மின்சாரப் பாதிப்பை ஈடுசெய்ய ஜெனரேட்டர் பொருத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பொருத்தப்படும்?

1979 நவம்பர் 5]

திரு. இரா, அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) ரூ. 2,42,000 மதிப்பீட்டில் ஜெனரேட்டர் ஒன்றை நாகப்பட்டினம் அரசினர் தலைமை மருத்துவமனையில் பொருத்துவதற்கான செயற்குறிப்பை 1979-80 வருடத்திற்கான இரண்டாம் பகுதி திட்டமாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. கூடியவிரைவில் அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, பொதுப்பணித் துறை மருத்துவ வேலைகளைப் பார்ப்பதில் தாமதம் காட்டுகிறது. புயலும், வெள்ளமும் நெருங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, அரசு அக்கறை எடுத்து உடனடியாக அதைப் பொருத்த வேண்டும். அதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அது பற்றிய வரைபடமும், மதிப்பீடும் இயக்குநரிடத்தில் இருந்து பெறப்பட்டு விட்டது. நிதித் துறை சற்று மாறுதலுடன் அதை ஏற்றுக்கொண்டுள்ளது. அதை பரிசீலனை செய்து விரைவிலே தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் ; தலைவரவர்களே, இப்படியொரு ஜெனரேட்டர் இல்லாததால் 1977-ஆம் ஆண்டு புயலின்பொழுது ஏராளமான பேஷன்டுகள் பாதிக்கப்பட்டு, பல ஆபரேஷன்களும் பாதிக்கப்பட்டது என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரியும் ; அதிகாரிகளுக்கும் தெரியும். இரண்டு வருஷமாகியும் இப்பொழுது தான் அது ஏற்படுகிறது என்கிறபொழுது இரண்டு வருஷங்களாக நடவடிக்கை எடுக்காமல் இருக்கக் காரணம் என்ன? இந்தத் தாமதத்திற்கு என்ன காரணம்? அலட்சியப் போக்கா? இல்லாவிட்டால், ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், விரைவில் விரைவில் என்று சொல்கிறார்கள், அரசாங்க மொழியில் விரைவில் என்றால் மூன்று வருஷம்கூட ஆகலாம். எனவே, ஒரு கால அளவை நிர்ணயித்து, ஸ்பெசிஃபிக்காக இத்தனை மாதங்களில் ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்வார்களா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்கு முன்பு 1979-80-ஆம் வருடத்திற்கான இரண்டாம் பகுதி திட்டமாக ஏற்கப்பட்டு, தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிக விரைவில் நிச்சயமாக அது நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உறையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]